செய்தி வெளியீடு எண்:209 நாள்: 18.04.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கான எழுத்துத் தேர்வு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் 24.3.2017 அன்று இணைய தளத்தில் வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்திலுள்ள காலிப் பணியிடங்களுக்கேற்ப 1 : 5 விகிதாச்சாரப்படி, சான்றிதழ் சரிபார்ப்பிற்கான பட்டியல் தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலர்களால் வெளியிடப்பட்டது. இப்பட்டியல் விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், நடைமுறையில் உள்ள இனசுழற்சி அடிப்படையிலும் தகுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டு தெரிவுப்பட்டியல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் 15.4.2017 மற்றும் 16.4.2017 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட பணி நாடுநர்களுக்கு, உரிய பணி நியமன ஆணை வெளிப்படையான கலந்தாய்வின் மூலம் அரியலூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருவாரூர், திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய 21 மாவட்டங்களில் 2444 பணிநாடுநர்களுக்கு 17.4.2017 அன்று வழங்கப்பட்டது. மீதமுள்ள மாவட்டங்களைச் சார்ந்த 1678 பணிநாடுநர்களுக்கு 18.4.2017 அன்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் தேர்வு ஆணை மற்றும் பணிநியமன ஆணை வழங்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பணிநாடுநர்களிலிருந்து 6 நபர்களுக்கு ஆய்வக உதவியாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு. ச. கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.ரெ. இளங்கோவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 18.4.2017**